சொல்வயல்

திங்கள் மின்னிதழ்

சொல்வளமே மொழிவளம் நெல்வளமே நாட்டின்வளம்

" சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுப்பீடம்"
(திருவிளையாடற்புராணம்–
தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்)

ஐ.எஸ்.பி.என் (ISBN): 978-81-958032-0-0

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு

வயல் : 7 விளைச்சல் : 68 திருவள்ளுவர் ஆண்டு 2056, (மார்கழி) – சனவரி – 2026

- நிலத்தியல்துறைக் கலைச்சொற்கள்
- தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'கில்' 'முள்' 'நுள்' 'உள்'
- பாவாணர் தம் வாழ்நாள் பங்களிப்பு
- வாலா போலா என்னும் லா ஒட்டும் மலேசிய வழக்கம்
- பொங்கல் இளமழை
- கதிரவன் தன்மைகளைக் கணித்த கன்னித்தமிழர்
- மதுரைக்காஞ்சியில் 'காழ்' ஒப்புருப் பொருண்மை
- இயக்ககச் செயற்பாடு

நிலத்தியல் துறைக் கலைச்சொற்கள்

Aquamarine	– கடல் நீலம்
Aquifer	– நீரகம்
Arid landscape	– வறட்சி நிலப்பரப்பு
Back waters	– உப்பங்கழி
Basalt	– எரிமலைப் பாறைவகை
Chartography	– நிலப்பட வரைவு
Contact spring	– தொடுபாறை ஊற்று
Diamond drilling	– வயிரத் துரப்பணம்
Fullers earth	– உழை மண்
Geochronology	– நிலக்காலவியல்
Ice berg	– பனிமிதவை
Ice sheet	– பனிப்படலம்
Longitude	– நில நெடுகோடு
Miner	– சுரங்கத் தொழிலாளி
Pedology	– மண்ணியல்
Permafrost	– நிலத்தடி உறைபனி
Physiography	– நிலக் கூற்றியல்
Quick sand	– புதை மணல்
Seismology	– நில நடுக்கவியல்
Stratigraphy	– பாறை அடுக்கியல்
Topography	– இட அமைப்பியல்
Toposheet	– நில அமைப்புப்படம்
Vadose water	– நிலையான நிலநீர்
Water table	– நிலத்தடிநீர்மட்டம்
Whirl pool	– நீர்ச்சுழி

சொற்குவை (sorkuvai.tn.gov.in) வலைத்தளத்தில் தமிழுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களையும், ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ்ச்சொற்களையும் பார்த்துப் பயன்கொள்ளலாம்.

சொல்வயல்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2056, சிலை (மார்கழி) சனவரி – 2026

ஆசிரியர் : திருமதி **க. பவானி**
இயக்குநர் (மு.கூ.பொ.)

பொறுப்பாசிரியர் : முனைவர் வே. கார்த்தி

இதழ்க்குழு : திரு. கி. இராமர்
திரு. ஏ. காந்தி
திருமதி. க. கத்தூரி

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
முதல் தளம், நகராட்சி நிருவாக அலுவலகக் கட்டடம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர்,
சென்னை – 600 028.
மின்னஞ்சல் : solvayal@gmail.com
வலைத்தளம் : www.sorkuvai.tn.gov.in

Directorate of Tamil Etymological Dictionary Project,
First floor, Urban Administrative office Campus,
No : 75 , Santhome high Road,
MRC Nagar, Chennai–28
Mail id : solvayal@gmail.com
Website : www.sorkuvai.tn.gov.in

ஐ.எஸ்.பி.என் (ISBN): 978-81-958032-0-0

தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'கில்' 'முள்' 'நுள்' 'உள்' ஆகிய சொற்களிலிருந்து பல சொற்கள் கிளைத்து வளர்ந்த முறையினைக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.

கில்

இ – கில்
கில் – கல் = தோண்டு. தோண்டுங் கருவி
கில் – கிள் – கீள் – கீழ்
கிள், கிள்ளு = நகத்தைக் கீழே பதி. கிள்ளுக்கீரை
கிள்ளை, கிள்ளி – கிளி = கனிகளைக் கிள்ளுவது
கிழி = கீறு. துணியைக் கிழி
கிழி = முடிச்சு, துணி, படம்
கீள் = கிழி. 'கீளார் கோவணம்'
கீழ். கீழ்க்கு – கிழக்கு = கீழிடம், ஒரு திசை
கீறு = கோடு கிழி.
கீற்று = கீறி அறுத்த துண்டு, துண்டு
கிறுக்கு = கோடு கீறு, மனப்பித்து (பைத்தியம்)
கீறல் = கோடிழைத்தல், எழுத்தறியாமை உணர்த்துஞ் சொல்
கீச்சு = கீறு

முள்

ஊ – உ – முள்
முள் = முன்சென்று பதி. நகத்தைப் பதி. பதியும் கூரான உறுப்பு.
முளவு = முள்ளம் பன்றி
முட்டு = முற்சென்று தாக்கு
முட்டை = முட்டி வருவது
முட்டு, முட்டுப்பாடு = முட்டித் திண்டாடல்
முடை = முட்டுப்பாடு
முண்டு = முட்டிக் கிளம்பு
முட்டி = கை கால் எலும்புப் பொருத்து
முழம் = கை கால் எலும்புப் பொருத்து. முன்கை யளவு
உ – ஊ. மூட்டு = பொருத்து
உ – ஒ. மொழி = கை கால் பொருத்து, கரும்புக் கணு
மொட்டு = முட்டிவரும் அரும்பு

நுள்

முள் – நுள்
நுழைவு = நுணுக்கம்
நுழை = இடுக்கமான வாயிலிற் புகு
நுண்மை = மிகச் சிறுமை.
நுண் + பு = நுட்பு. நுட்பு + அம் = நுட்பம்

நுணங்கு = நுட்பமாகு

நுணி = கூரிதாகு

"நுழைவும் நொசிவும் நுணங்கும் நுண்மை" (தொல். உரி.78)

நுணகு = சிறிதாகு.

நுணுக்கம் = நுட்பம்

நொய் = நுட்பமானது, நொய்ந்து கெடு

குறுநொய் = உடைந்த அரிசி; நொய்ம்மை = நுட்பம்

நொசி = நுட்பமாகு

நொசநொச = நொய்ந்துபோதற் குறிப்பு

உள்

உள் = உட்பக்கம்

உள், உள்ளம், உளம் = மனம்

உள், உள்ளு = நினை

உளப்பாடு = உட்படுத்தல்

உள்ளீடு = பொருளடக்கம்

உட்படு = அடங்கு, இணங்கு

உட்கோள் = கருத்து

உள்ளான், உள்ளல் = நீர்க்குள் மூழ்கும் பறவை

உள்ளி = நிலத்திற்குள்ளிருக்கும் வெங்காயம்

ஈர + உள்ளி = ஈருள்ளி

உளவு = உள்ளிருந்தாராய்தல், துப்பு

உண் = உட் செலுத்து, சாப்பிடு. உட்கொள் = சாப்பிடு

உறிஞ்சு = உள்ளிழு

உள்கு – உட்கு = அச்சத்தால் உள்ளொடுங்கு, அச்சம்

உட்கு + ஆர் = உட்கார், அச்சத்தாற் குந்து, குந்து, இரு

உட்கி – உக்கி = அச்சத்தாற் குந்திச் செய்யும் கரணம்

உண்மை = உள்ளிருத்தல், இருத்தல், மெய்

உள் + து = உண்டு. உள் + அது = உள்ளது

உண்டு + ஆகு = உண்டாகு

உ – ஒ; ஒல்கு = ஒடுங்கு, தளர்

ஒற்கு + அம் = ஒற்கம் = தளர்ச்சி

ஒல்லி = ஒடுங்கிய, மெல்லிய

ஒடுங்கு = நெருக்கமாகு, ஒல்லியாகு

இவ்வாறு தமிழ்மொழியின் சொற்பிறப்பு வரலாறு குறித்து மொழிஞாயிறு பாவாணர் எழுதியுள்ள செய்திகளை நாமும் உணர்ந்து வருங்காலத் தலைமுறையினருக்கும் உணர்த்தி அவர்களின் உள்ளங்களில் தாய்மொழிப் பற்றை விதைப்போம்.

பாவாணர் தம் வாழ்நாள் பங்களிப்பு

முனைவர் இரா.கு.ஆல்துரை
தமிழ்நாட்டரசின் வீரமாமுனிவர் விருதாளர்

சொல்லாய்வு

பாவாணர் முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் சிலவற்றை ஆங்கிலத்திலும் எழுதி யுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட தனிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் படைப்புகளுள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள், பழமொழி பதின் மூவாயிரம் போன்றன அச்சேறாது போய்விட்டன. பாவாணரது படைப்புகளை மேற்போக்காக மொழிநூலாய்வு, சொல்லாய்வு, வாழ்வியல் ஆய்வு, உரையும் பாட்டும் பற்றிய ஆய்வு என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் (இளங்குமரன் 1985:51). இந்நால் வகைப் படைப்புகளும் ஒன்றனுக்கொன்று சார்புடையன. மொழிநூலாய்வு என்பது சொல்லாய்வை உள்ளடக்கியது; வரலாறு, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைத் தழுவிய வாழ்வியல் ஆய்வு மொழிநூற்குத் துணை உறுப்புகளாக அமைவன. உரையும் பாட்டும் இயற்றமிழோடு தொடர்புடையன. இவையும் மொழிநூற்கு அடிப்படைகளாக அமைகின்றன. இந்நால்வகை ஆய்வுகளில் பாவாணரது படைப்புகளில் மொழியாய்வும் அதற்குத் துணை நிற்கும் சொல்லாய்வும் மேலோங்கி நிற்கின்றன.

சொற்களின் தோற்றம், வரலாறு. வளர்ச்சி ஆகியன பற்றிய ஆய்வு சொல்லாய் வாகும். காலப்போக்கில் சொற்களின் பொருள்கள், வடிவங்கள், ஒலிகள் ஆகியன பெற்றுவந்துள்ள மாற்றத்தினைக் கண்டறிந்து, மொழியின் பழமையான நிலையினைக் காட்ட முயல்வது இவ்வாய்வாகும். இது ஒரு சொல்லின் குடும்ப வரலாற்றை ஆய்ந்தறிவது போன்றது.

பாவாணர் தம் வாழ்நாள் முழுமையும் சொல்லாய்வு செய்து வந்துள்ளார். பலர் அவரது ஆய்வுக்கு ஊக்கம் கொடுத்து வந்துள்ளனர். அதே நேரத்தில், சிலர் அவரது சொல்லாய்வைக் குறை கூறியும் வந்துள்ளனர். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் பாவாணர் ஆய்வினைக் குறைகூறியவர்களுள் பெரும்பாலோர் பாவாணர் ஆய்வு நெறியை முழுமையாகப் படித்தவர்கள் அல்லர். எவ்வாறாயினும் நிறை குறை என எது வந்த போதிலும் மனம் தளராமல் தம் ஆய்வினை நடத்தி வந்துள்ள நிலை பாவாணரிடம் உறுதியாக இருந்துள்ளது. இதற்கு முதன்மையான காரணங்களாக அவரிடம் காணப்பட்ட சொல்லாய்வில் ஆழ்ந்த பயிற்சியையும், மிகுந்த ஈடுபாட்டையும் குறிப்பிடலாம். சென்ற நூற்றாண்டின் வண்ணனை மொழியியல் வளர்ச்சியைக் கண்டு அதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அறிஞர்கள் பாவாணர் சொல்லாய்வினை மொழியியல் ஆய்விற்கு இயைந்து போகாதது எனக் கொண்டிருந்தனர். ஆனால் உண்மை அதுவன்று. பாவாணர் நிகழ்த்தியுள்ளதும் மொழிநூலாய்வுதான். வேண்டுமென்றால் வண்ணனை மொழிநூலார் பயன்கொண்ட வரிசை ஒழுங்கை இவர் கையாண்டிருக்கவில்லை என்று வேண்டுமானால் குறிப்பிடலாம். அல்லது அவர்கள் கையாண்ட கலைச்சொற்களை இவர் பயன்படுத்தவில்லை என்று சொல்லலாம்.

சொல்லாய்வறிஞர்

"சொற்களைப் பற்றி அறிந்து கொள்வது ஒரு பள்ளி மாணவனுக்கு சாலையோரத்தில் கல்லுடைக்குக் தொழிலாளியைப் போல் சலிப்பூட்டுகிற செயலாக இருக்கலாம். ஆனால் மண்ணியல் ஆராய்ச்சி யாளனின் கருத்தாழமிக்க கண்ணுக்கு மிகவும் ஆர்வமூட்டுகிற செயலாகும். அவர் நெடுஞ்சாலையில் வியக்கத்தக்க செய்திகள் அடங்கியிருப்பதைக் காண்கிறார். அவர் ஒவ்வொரு குழியிலும் தொடர் செய்திகள் அடங்கி இருப்பதைக் காண்கிறார். மொழியும் வியக்க வைக்கும் செய்திகளைக் கொண்டுள்ளது. பொறுமை வாய்ந்த மாணவனின் ஆராய்ச்சிப் பார்வைக்கு இவ் வியத்தகு செய்திகள் தென்படுகின்றன. மொழியினுள் தொடர் செய்திகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சொல்லிலும் விளக்கங்கள் பொதிந்துள்ளன. மாந்தக் கருத்தின் வைப்பிடமாக இருப்பதால் மொழி தெய்வீகக் கிடங்கு என்று அழைக்கப்படுகிறது" (Max Muller 1965:2–3) என்பன போன்று வரும் அறிஞர்களின் குறிப்புகளி

லிருந்து சொல்லாய்வாளனது தணியா ஆர்வத்தை உணரலாம். பேரளவில் கருத்துகளைத் தாங்கிப் பெருங் கிடங்காக இருக்கும் தமிழ்மொழியி லிருக்கும் கருத்துகளை விளக்க வேண்டும் என்ற தணியா விருப்பம் பாவாணரிடம் மேலோங்கி இருந்தது.

மொழித் தேர்ச்சி

இலக்கணமும் அகரமுதலியும் ஒரு மொழியைப் புரிந்து கொள்ள பெருந்துணை புரிகின்றன. இவற்றுள் அகரமுதலிக் கலையோடு சொற்பிறப்பியலும் மொழியியல் துறைக்கு வேண்டியன எனக் கொள்கிறார் பாவாணர். அதனால் தான் இவ்விரு பிரிவுகளுக்கும் தம் படைப்புகளில் பரந்த இடமளித்துள்ளார். இலக்கணத்தில், குறிப்பாகத் தொல்காப்பியத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். அகர முதலிக் கலைக்கு மேனாட்டு அறிஞர் சொற்களைப் பற்றியும், சொற்பிறப்பியலைப் பற்றியும் குறிப்பிடுவதைத் தழுவித் தம் படைப்புகளை ஆக்கி யுள்ளார்.

பழைய நிலை

பாவாணரது சொல்வாய்வில் பெரும்பாலும் தமிழின் பழைய நிலைகளை விளக்கும் தன்மைகளே இடம்பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக மொழித் தோற்றத்தைப் பற்றிய அவரது கருத்துகள் அறப்பழங்காலத்து நிலைகளை விளக்குவனவாக இருக்கின்றன. இவ்வாறு இருக்கும் வரலாற்றுக்கு முந்தைய நிலைகளை அறிவியல் அடிப்படையில் ஆராய இயலுமா என்ற வினா எழுவது இயற்கை.

"பத்து இலக்கம் அல்லது இருபது இலக்கம் ஆண்டுகளுக்கு முன் மொழி உருவாகி யிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த நீண்ட கால இடைவெளி அறிவியல் ஆராய்ச்சிக்குக் கொள்ள முடியாத தடை என்று கருதப்படுவது இல்லை….. மொழியியலாளர்களால் ஒப்பியல், மீட்டுருவாக்கம் ஆகிய முறைகளினால் நேரடியான பதிவுகள் அல்லது எழுத்துச் சான்றுகள் இல்லாத மொழிகளின் பழைய நிலைகளை மீட்டுருவாக்கம் செய்ய இயலும்" (Swadesh, Morris 1972:2) என அறிஞர்கள் கருதுகின்றனர். வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய வரலாற்றினை அறிய துணையாக இருப்பனவற்றுள் மொழி முதன்மையான இடத்தைப் பெறுகிறது. அவ்வகையில் மொழியின் இயல்பை முற்றிலும் உணர பாவாணர் தம் ஆய்வினை மேற்கொண்டுள்ளமையை அவரது படைப்புகள் காட்டுகின்றன. பாவாணர் மரபு தழுவியும், இக்கால மொழியியல் அடிப்படையிலும் மொழியாய்வு செய்துள்ளார். என்றாலும் இக்காலத்து வண்ணனை மொழியியலாளர் கருத்துகள் சிலவற்றை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

மொழி

"மொழி மாந்தனால் படைக்கப்பட்டது. பார்வை, உடல் உறுப்புகளைப் பயன்படுத்திக் குறிப்பால் உணர்த்தல் போன்றவற்றால் தன் எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்த முடியாத நிலையில் மாந்தன் தன் எண்ணங்களை வெளிப்படுத்தும் கருவியாக மொழியை உருவாக்கிக் கொண்டான். நாம் இன்று கொண்டிருக்கும் முழுத் தன்மை வாய்ந்த மொழியாக உருப்பெறுவதற்குப் பல தலைமுறைகள் ஆகியுள்ளன. மொழி படிப்படியாக வளர்ந்து இன்றுள்ள தன்மையை எட்டி யுள்ளது" (Max Muller 1965:30). இது போன்று வரும் மொழி வரலாற்றின் தன்மைகளை உணர்ந்து பாவாணர் தம் மொழி ஆய்வையும் சொல்லாய்வையும் நடத்திச் சென்றுள்ளார். இதனை "மொழியானது இந் நாட்டில் பொதுவாகக் கருதுகிறபடி இறைவனாற் படைக்கப்பட்டது மன்று; இயற்கையாய் உள்ளது மன்று. மாந்தனால் ஆக்கப்பட்டதே. ஆயின், ஒருவனால் மட்டுமன்று. கழிபல ஊழிகளாகக் கணக்கற்ற தலைமுறையினரால் சிறிது சிறிதாய் ஆக்கப்பட்டதாகும்" (பாவாணர் 1953:முக.9) என்பன போன்று அவர் குறிப்பிடுவதனால் அறியலாம்.

மொழித் தோற்றம்

மொழியின் பிறப்பைப் பற்றிப் பல வகையான கருத்துகள் வெளி வந்துள்ளன. என்றாலும், இதுவரை அனைவருக்கும் ஏற்புடைத்தான ஒரு முடிவு வரவில்லை. இதற்குரிய காரணங்களாக அமைவனவற்றுள் மொழியும் மாந்த எண்ணமும் தனித்தனியாகப் பிரிக்க இயலாத வகையில் இருப்பதும் ஒன்றாகும். இவ் விரண்டும் ஒன்றை விட்டு மற்றொன்று நிற்கும் தன்மையினவாக இல்லை. இவை இரண்டும் ஒன்றனை ஒன்று சார்ந்து இருக்கின்றன. ஆகையால் மொழியின் தோற்றம் என்பது மாந்த எண்ணத்துடன்

தொடர்பு கொண்டதாகும். மாந்தன் எப்பொழுது எண்ணக் கற்றுக் கொண்டான் என்பதைக் கண்டறிந்து விட்டால் மொழியின் தோற்றத்தைத் தெளிவாக விளக்கி விடலாம். அதாவது மாந்தன் எப்படி எப்பொழுது பேசக் கற்றுக் கொண்டான் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆகையால், எண்ணும் ஆற்றல் உள்ளவனாக மாந்தன் எப்பொழுது வளர்ச்சி அடைந்தான் என்பதை அறிவது இன்றிமையாதது ஆகிறது (Wren 1994:5)

ஞால முதன்மொழி

மக்கள் தோற்றத்தைப் பற்றிய குமரிக்கண்ட கோட்பாடும், ஞால முதன்மொழிக் கோட்பாடும் பாவாணர்தம் ஆய்விற்கு அடி மணைகளாக அமைகின்றன. மாந்தன் தோற்றத்துடன் மொழித் தோற்றத்தையும் இணைத்துப் பார்க்கும் பார்வை அவரது படைப்புகளில் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. வரலாற்றில் பின்னோக்கிச் செல்லச் செல்ல மக்கள் தொகை குறைந்து போவது போல் மொழிகளின் எண்ணிக்கையும் குறைவாய் இருந்துள்ளன. இன்று உலகில் பேசப்படும் மொழிகள் பல, ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருக்கவில்லை. அவை பிற்காலங்களில் தோன்றியுள்ளன. அதேபோல் முற்காலத்தில் பேசப்பட்டு வந்த மொழிகள் பல இன்று வழக்கில் இல்லாமல் போய் உள்ளன. அதாவது காலவோட்டத்தில் மொழிகள் பல அழிந்துள்ளன. அறப் பழங்காலத்தில் மொழியும் இன்றுள்ள அளவிற்கு அதிகமான சொற்களைக் கொண்டு வளர்ச்சி அடைந்த நிலையில் இருக்கவில்லை. மொழியின் அந்தச் சுருக்க நிலையை ஆய்ந்து நிலை நாட்டுவதற்குத் தம் படைப்புகளை ஆக்கியுள்ளார்.

"மொழியின் தோற்றத்தைப்பற்றிய கருத்து பல காலமாக அறிஞர்களிடையே இருந்து வந்துள்ளது. சிலர் ஒரு மொழி தோற்றத்தைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். இன்னும் சிலர் பலமொழிகள் தோற்றத்தைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். மொழி ஓரிடத்தில் ஒரே முறை தான் தோன்றி யுள்ளது என்பதும் உலகில் உள்ள மொழிகள் எல்லாம் தொடக்க காலத்தில் இருந்த அந்த ஒரு மொழியிலிருந்து வேறுபட்டுப் பிரிந்து வந்துள்ளன என்பதும் ஒரு மொழித் தோற்றத்தைக் குறிப்பதாகும். மூல மொழிகள் பல இடங்களில் வேறுபட்ட காலங்களில் தோன்றியுள்ளன என்பது பல மொழிகள் தோற்றத்தைக் குறிப்பதாகும்"(Swadesh, Morris 1972:1).

தனித்தமிழ்

பாவாணர் என்றும் தனித் தமிழை விரும்புபவராக இருந்துள்ளார். அதனால் அவரது படைப்புகள் தனித் தமிழுக்கு ஏற்றம் கொடுப்பன வாக இருக்கின்றன. இவரது தனித்தமிழ் கோட்பாட்டை மேலோட்டமாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பிறமொழிச் சொற்களை தமிழில் இருந்து அகற்றுதல்; இரண்டாவது தமிழ் சிதைவைத் தடுத்தல்; மூன்றாவது புதியதாகத் தோன்றும் பொருள்கள் பற்றிய கலைச் சொற்கள் வழங்கல்.

இவர் நோக்கில் தமிழ் இலக்கணக் கட்டுக்கோப்பிற்குப் பொருந்தாதவை தமிழ் இலக்கியங்களில் ஆட்சி பெற்றிருந்தாலும் நெடுங்காலமாக மக்கள் வழக்கில் நிலைபெற்றிருந்தாலும் அவை அனைத்தும் விலக்கத்தக்கவை யாகின்றன. தமிழின் இலக்கணக் கட்டுக்கோப்பிற்கு உட்படாதவை அனைத்தும் இவருக்குப் பிழைபட்டனவாகவும் சிதைவுற்றனவாகவும் தெரிகின்றன.

பேச்சு மொழி

"எழுதப்படுவது மொழி யன்று. கண்ணுக்குத் தெரியும் குறிகளால் மொழியைக் குறித்து வைக்கும் முறையே எழுத்து ஆகும். சீனம், எகுபது, மெசபட்டோமியா போன்ற சில நாடுகளில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதும் முறை இருந்துள்ளது. ஆனால் இன்று உலகத்தில் பேசப்படும் மொழிகளில் பெரும்பாலானவை அண்மைக் காலங்களில் எழுத்து வடிவம் பெற்றவையாக இருக்கின்றன. அல்லது எழுத்து வடிவம் பெறாத நிலையில் உள்ளன. அச்சு வரும் காலம் வரை எழுத படிக்கும் கலை ஒரு சிலருக்கு மட்டும் தெரிவதாக இருந்தது. அனைத்து மொழிகளும் அம்மொழிகள் வரலாறு நெடுகிலும் எழுத படிக்கத் தெரியாத மக்களால் பேசப்பட்டு வந்துள்ளன. அம்மக்கள் மொழிகள் நிலைப்பாடு, ஒழுங்கு, வடிவம் ஆகியன எழுத்தமைந்த நாட்டு மொழிகளைப் போல் வளம் உடையன" (Bloomfield 1996:20). "உயிருள்ள மொழிக்குப் பற்றுக்கொடு மக்கள் நாவே" (பாவாணர் 1992:75) என மொழியின் பேச்சு உயிர்ப்புத் தன்மையை முற்றிலும் உணர்ந்தே தம் ஆய்வுக் கருத்துகளை வெளிப்படுத்தினார் பாவாணர். எழுத்து மொழியில் தனித்தமிழைப் பேண வேண்டும் என்று விரும்பியது போலவே பேச்சு வழக்கிலும் மொழித் தூய்மை காக்க வேண்டும் என்று விரும்பினார். எவ்வாறு தமிழில் இலக்கண கட்டுக்கோப்பு எழுத்து

மொழியில் நிலவ வேண்டும் என்று விரும்பினாரோ அவ்வாறே பேச்சு மொழியிலும் இலக்கண கட்டுக்கோப்பை வலியுறுத்தினார். தமிழ்ப் பேச்சு வழக்கில் காணப்படும் கொச்சை வழக்குகளை நீக்கிச் செம்மைப்படுத்த விரும்பினார். சுருக்கமாகச் சொன்னால் தமிழ் எவ்வகையிலும் கட்டுக்குலையாமல் இருக்க வேண்டும் என்று விரும்பினார். அவ்வழியைத் தாமும் கடைப் பிடித்தார். தாம் பேசும் பொழுதும் செந்தமிழ் நடையைக் கையாண்டார்.

தமிழின் தனித்தன்மை

"மொழியலாளர்கள் அனைத்து மொழிகளையும் ஒரே தன்மையின வாகக் கொண்டு ஆராய்கின்றனர். தம் காலத்துப் பாமர மக்களின் பேச்சுகளி லிருந்து வேறுபடும் பெரிய எழுத்தாளர் மொழியின் தனித்தன்மைகள் தனிப்பட்ட ஒருவரின் பேச்சின் தனித்தன்மைகளைக் காட்டிலும் எவ்வகை ஆர்வமும் அவர்களுக்குத் தருவதில்லை. எழுத்தாளர் மொழியின் தனித்தன்மைகள் அனைவரின் பேச்சு மொழியின் பொதுவான தன்மைகளைக் காட்டிலும் குறைந்த அளவு ஆர்வம் தான் அவர்களுக்கு அளிக்கின்றன" (Bloomfield 1996:22).

வரலாற்றுக்கு எட்டாத பண்டைக் காலத்தில் இலக்கண இலக்கிய வளத்தோடு இருந்த மொழி தமிழ். தமிழில் பல வழக்குகள் இருந்த போதிலும்

"வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட்கு ஆகலான" (தொல். பொருள்.646)

என்பதற்கேற்ப புலவரும் உயர்ந்தோரும் பேசும் வழக்கே தமிழுக்கு உலக வழக்கு எனக் கொள்ளும் பாவாணர் அனைத்து மொழிகளையும், அனைத்து வழக்குகளையும் ஒரே தன்மையினவாக கொள்ள வேண்டும் என்ற வண்ணனை மொழி நூலாரின் கருத்துக்கு முழுவதும் மாறுபடுகிறார் (பாவாணர் 1968:99).

உயிர், மெய், உயிர்மெய் என எழுத்தொலிகளை முதன் முதல் மூவகையாகப் பிரிந்து கொண்டது, ஓர் ஒலிக்கு ஒரு வரி வடிவம் கொண்டது, பேசுகிறபடியே எழுதி வந்தது, எழுதுகிற படியே பேசி வந்தது, பொருள்களைப் பகுத்தறிவு அடிப்படையில் உயர்திணை, அஃறிணை எனப் பகுத்து அதற்கேற்ப சொல் வடிவங்களை அமைத்துக் கொண்டது, செய்யுளிலேயே பேசும் திறனை வளர்த்துள்ளது, கருத்துகளை மெய்ப்பாட்டுடன் வெளிப்படுத்த நால்வகைப் பாக்களைப் படைத்துக்கொண்டது, செய்யுளிலேயே இலக்கியம் படைத்துக் கொண்டது, பொருள் இலக்கணத்தைக் கொண்டிருப்பது, மொழியின் இலக்கண வடிவு சிதையாதிருக்க செந்தமிழ் என்னும் வரம்பிட்டுக் கொண்டது போன்றவற்றால் செம்மை என்னும் அரண் தமிழுக்குக் கிடைத்தமையாலேயே பிறமொழிகள் போல் உருத்தெரியாதவாறு திரியாது வழக்கில் இருந்து வருகிறது என்று குறிப்பிடுகிறார் (பாவாணர் 1968:99).

அகரமுதலிக் கலைஞர் (lexicographer)

"ஒரு மொழியில் ஓர் அகரமுதலி தொகுத்தற்கோ திருத்தற்கோ இலக்கணவறிவு, சொல்லாராய்ச்சி, மொழியாராய்ச்சி, சொற்றொகுப்பு ஆகிய நாற்றிறம் வேண்டும். இவற்றை ஒருங்கே யுடையவர் தனிப்பட ஓர் அகரமுதலியைத் தொகுக்கலாம் அல்லது திருத்தலாம்" (பாவாணர் 1968:67) என்று ஓர் அகரமுதலிக் கலைஞருக்காக அடிப்படைத் தகுதியைக் குறிப்பிட்டுள்ளார். இத் தகுதியை முற்றிலும் பெற்றிருந்தவராகப் பாவாணர் விளங்கினார்.

சொற்பிறப்பு

"ஒரு மொழியில் ஒரு பேச்சு வடிவத்தின் பழைய வடிவங்களைத் தேடிப் பெறுவதிலிருந்தும் அம்மொழியோடு தொடர்புடைய இன மொழிகளில் அவ்வடிவத்தின் முந்தைய நிலையிலிருந்தும் மாறிக் காணப்படும் மாறிய வடிவங்களிலிருந்தும் சொற்பிறப்பு பெறப்படுகிறது…… சொற்பிறப்பு என்பது கட்டாயமாகப் பழைய வடிவத்தைக் காட்டுவதாகவும் வெளிப்படையான பொருளைக் கொண்டிருக்க வேண்டியதாகவும் இருக்க வேண்டும் என்று இக்காலத்தில் கொள்ளப்படுவதில்லை" (Bloomfield 1996:15).

பாவாணர் சொல்லாய்வில் ஆழமாக வேரூன்றியவர். வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டு தன்மைகளையும் நுணுகி ஆய்ந்தவர். பொது வழக்கு, வட்டார வழக்கு, நாட்டு வழக்கு, குடி வழக்கு, இன வழக்கு, தொழில் வழக்கு, போன்ற வழக்குகளின் தன்மைகளை உணர்ந்தவர். இலக்கிய வழக்கு, இலக்கண வழக்கு ஆகிய நூல் வழக்குகளிலும் நுண்ணிய தேர்ச்சி கொண்டவர். திராவிட மொழி அறிவும் வாய்க்கப் பெற்றவர். இவ்வாறு இருக்கும் பொழுது சொற்பிறப்பு காண்பது பாவாணர்க்கு எளிமையாய் அமைந்துவிட்டது.

"மொழி பலவகையான உள் கட்டமைப்பினைக் கொண்டது. ஒரு மொழியின் அமைப்பினை அதன் பல்வேறு கூறுகளைப் பிரித்து ஆராய வேண்டும். இக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவும், சிறப்புடை யனவாகவும் இருப்பதால் இவை அனைத்தும் ஒன்று சேர்ந்தே மொழி பயன்பாட்டில் இடம் பெறுகின்றன" (Gleason 1974:373). இதுபோன்று வரும் மொழியின் அனைத்துத் தன்மைகளையும் அறிபவராலேயே சொற்பிறப்பினைச் செம்மையாகச் செய்ய இயலும். அவ்வகையில் பாவாணரிடம் மொழியறிவு திறம்பட அமைந்திருந்த தனால் அவருக்குச் சொற்பிறப்பு முயற்சி எளிமையாக அமைந்தது.

இரு வழக்கு

பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் கொண்ட மொழியின் அமைப்பைப் பேச்சு வழக்கை மட்டும் அல்லது எழுத்து வழக்கை மட்டும் வைத்து ஆராய்ந்தால் அதன் முழு அமைப்பை அறிய முடியாது. ஒலிகளலாகிய குறியீடுகளைக் கொண்ட அமைப்பு மொழியாகும். அவ்வொலிகள் பேசப்படலாம்; எழுதவும் படலாம். எனவே, மொழியாகிய அமைப்பைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டு வழக்குகளையும் ஆராய வேண்டும். அதனால்தான் தமிழ் இலக்கணப் புலவர்கள் உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரண்டையும் இலக்கணத்திற்கு எடுத்து ஆராய்ந்துள்ளனர் (தொல்.பாயிரம் 4). இதைப் போன்றே பாவாணர்தம் படைப்புகளில் பேச்சு, எழுத்து ஆகிய இரு வழக்குகளையும் எடுத்தாண்டுள்ளார்.

பாவாணர் படைப்புகளின் தன்மைகளைப் பலரும் அறியும் வண்ணம் விளக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். பல கோணத்தில் ஆய்ந்த இவரது படைப்புகளில் மேலோங்கிய தன்மைகளை வெளிக்கொணர வேண்டியது அகத்தியமாக இருக்கிறது. மொழிபற்றிய இவரது கொள்கைகள் இன்றைய அறிவியல் சார்ந்த ஆய்வுக்கு ஏற்ப அமைந்துள்ள தன்மைகள் காட்டப்பட வேண்டும். இவரது படைப்புகளைக் கொண்டு தமிழின் தொன்மை, சிறப்பு போன்றவற்றைத் தெளிவாக்க வேண்டும். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி உருவாக்கத்தில் பாவாணரின் பங்களிப்பு, இவர்தம் படைப்புகளில் ஆங்காங்கே காட்டியுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு அடிப்படையாக அமையும் சொற்பிறப்பு நெறிமுறைகள் ஆகியவற்றை விளக்குவதும் இவர்தம் பங்களிப்பை முவதுமாகப் புரிந்துகொள்ளச் செய்யும்.

ஒரு சொல்லின் வரலாற்றை அறிந்துகொள்வது எழுதுபவர் அல்லது பேசுபவரின் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் புரிந்து கொள்ள உதவும். சொற்களின் வேர்கள், முன்னொட்டுகள், பின்னொட்டுகள் ஆகியவற்றை அறிந்துகொள்வது மொழியில் தோன்றும் புதிய சொற்பொருள்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது; மொழிக்குக் காலந்தோறும் தேவைப்படும் பொருள் களுக்கும் கருத்துகளுக்கும் உரிய சொற்கள் படைப்பதற்குப் பெருந்துணை புரியும். அவ்வகையில், பாவாணர் படைப்புகள் தமிழ் மொழியைப்பற்றிய முழுத் தன்மைகளையும் கொண்டிருப்பதால் அவர்தம் பங்களிப்பை முழுமையாக அறிந்துகொள்வது தமிழ் நலத்தினைக் காப்பதாக இருக்கும்.

குறிப்புதவி நூல்கள்

1.) இளங்குமரன், இரா.,1985, தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள், உலத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

2.) தொல்காப்பியம், சேனாவரையருரை

3.) பாவாணர் (ஞா.தேவநேயப் பாவாணர்) 1953, முதல்தாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம், கழகம் சென்னை

4.) பாவாணர் (ஞா.தேவநேயப் பாவாணர்) 1968, வண்ணனை மொழிநூலின் வழுவியல், கழகம், சென்னை

5.) பாவாணர் (ஞா.தேவநேயப் பாவாணர்) 1992, சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், கழகம், சென்னை (முதற்பதிப்பு 1949)

6.) Bloonfield, Leonard, 1996, Language, Motilal Banarsidas, Delhi (first published 1933)

7.) Gleason, H.A., 1974, An Introduction to Descriptive Linguistics, Oxford &IBH Publishing Co., New Delhi (first published 1955)

8.) Max Muller, 1965, Lectures on The Science of the Language, Munshi Ram Manoharlal , New Delhi (first published 1861)

9.) Swadesh, Morris (1971, The Origin and Diversification of Language, Aldine Atherton, Chicago/ New York

10.) Wrenn, C.L., 1994, The English Language, Vikas Publishing House Pvt., Ltd., New Delhi

வாலா போலா என்னும் லா ஒட்டும் மலேசிய வழக்கம்

இரா. திருமாவளவன்
தேசியத் தலைவர்,
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்

மலேசிய மக்களில் சிலர் பேசும் வேளையில் பல்வேறு வினைச் சொற்களுக்கும் பெயர்ச்சொற்களுக்கும் பின்னால் லா எனும் ஒட்டினை இணைத்துப் பேசும் வழக்கினைப் பலரும் கண்டிருப்பார்கள். இவ்வழக்கினைத் தமிழ்நாட்டுத் தமிழர் பகடியாகப் பேசுவதும் உண்டு. லா ஒட்டிப் பேசினாலே, பேசுபவர் மலேசியத் தமிழராகவோ சிங்கைத் தமிழராகவோ தாம் இருத்தல் வேண்டும் எனும் கருத்து பரவலாக இருந்து வருகின்றது.

இவ்வொட்டு வழக்கம் மலாய் மொழியில் இயல்பாய் வழங்குவதாகும். மலாய் மொழி இலக்கணத்தில் பரவலாக இதனை வினைச்சொல்லுக்குப் பின்னால் ஒட்டியே பயன்படுத்துவர். பெயர்ச்சொல்லுக்குப் பின்னால் ஒட்டிப் பயன்படுத்தும் வழக்கமும் உண்டு.

ஒரு கருத்தினை வலியுறுத்திக் கூறுதற்காக மலாய் மொழியில் lah லா வினைச்சொல்லுக்குப் பின்னால் இணைத்துப் பயன்படுத்தப்படுவதாக மலாய் மொழி இலக்கண நூல்கள் கூறுகின்றன. இதில்அழுத்தங்கொடுத்துஉணர்ச்சியாகவும் பேசுவர்.

Lah லா எனும் இவ்வொட்டுச் சொல் அரபிலிருந்தும் சமற்கிருதற்திலிருந்தும் சென்றதாக மலாய் மொழி ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். இஃது உண்மையில் அரபிலிருந்தும் சமற்கிருதற்திலிருந்தும் சென்றதுதானா என்பதை நிறுவ அவர்கள் போதுமான சான்றுகளை வழங்கவில்லை. லாகு Lahu எனும் அரபுச் சொல் இவ்வாறு மலாயில் மாறியதாம்.

இப்பொழுதே வர வேண்டும் என்பதை Marilah– வாலா என்பர். இஃது ஓர் அழுத்தம் கொடுத்துச் சொல்வது.

Duduk sinilah– இங்கு உட்காருலா எனச் சற்று மெல்லியதாய்க் கூறுவது.

Cantiklah – அழகுலா என வியந்து போற்றுவது; பாராட்டுவது.

Ada rambutan, durianlah – மயிரம் பழமும் முள்ளம் பழமும் இருக்கிறதுலா.. எனப் பொருள்களை வரிசைப்படுத்திச் சொல்வது.

Macam Manalah – எப்படிலா? என மனம் தாழ்ந்து கேட்பது.

Makanlah– சாப்பிடுலா
Pergilah– போலா
Marilah – வாலா
என மென்மையான கட்டளைக்கும்

Dialah yang mencuri– அவன்தான்லா திருடினான்
என வலியுறுத்திச் சொல்லுதற்கும்

Kamulah yang harus mengerjakan – நீதான் லா வேலையைச் செய்ய வேண்டும் என முன்னிலைப் பெயரில் வலியுறுத்திக் கூறவும்

Baiklah– சரிலா
Sudahlah– முடிந்ததுலா

என நம்பிக்கையை வலுப்படுத்துதற்கும் இந்த லா மலாய் மொழியில் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகு மலாய் வழக்குதான் உண்மையில் மலேசியத் தமிழரிடையே தாக்கத்தை ஏற்படுத்தியதா? இதனைத் தெளிவுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்டை மாந்தன் உணர்ச்சி ஒலிகளாகவே தம் கருத்தினை முதற்கண் வெளிப்படுத்தினான். இவ்வுணர்ச்சி ஒலிகள் நெட்டொலிகளாகவே இருப்பதே இயல்பு. பொருளின், ஆளின், வேறோர் உயிரின் இருப்பினை உணர்த்தி மூவிடத்தையும் சுட்டுதற்கு தமிழில் முதற்கண் வாய்ச்செய்கையாகவும் உணர்ச்சியாகவும் நெட்டித்து ஒலிக்கப்பட்டவையே ஆ ஈ ஊ எனும் சுட்டொலிகள். இவையே பின்னர் உயிர் எழுத்து தோற்றத்திற்கும் பல்லாயிரச் சொற்களின் ஆக்கத்திற்கும் கரணியமாயின.

தமிழிலும் ஏனைய மொழிகளிலும் விளித்தற்கு உயிர் நெடில்களையே பயன்படுத்துவர்.

ஆ, ஓ, ஈ, ஏ முதலான உயிர் நெடில்கள் இவ்வாறு விளிகளாகப் பயன்படுவையாகும்.

கண்ணா
அம்மா
அப்பா
தம்பீ
தம்பியோ

இவை ஈறு மிகுந்தே இயல்பாய் வழங்கும். அதே வேளை ஈறு கெட்டும், ஈறு திரிந்தும், ஈற்றயல் ஈறு கெட்டும் , திரிந்தும் அமையும்.

ஈறு மிகை

மகன்> மகனே,
மகள்> மகளே,
தெய்வம்> தெய்வமே

ஈறு கெடுதல்

அம்மை> அம்ம,
ஐயன்> ஐய,
தோழன்> தோழ,
வளவன்> வளவ,

ஈறு திரிதல்

தங்கை > தங்காய்,
பிள்ளை> பிள்ளாய்,
அன்னை> அன்னாய்

ஈற்றயல் திரிதல்
ஐயன்> ஐயன்மீர்,
தோழர்> தோழ> தோழரீர்,
மாணவர்> மாணவ > மாணவீர்/ மாணவரீர்

ஈறு கெட்டு ஈற்றயல் திரிதல்
நண்பன்> நண்பா
அழகன்> அழகு> அழகா
அறிவன்> அறிவு > அறிவா

ஈறு கெட்டு அயல் திரிந்து ஈறு மிகுதலும் உண்டு

ஐயன் > ஐயா> ஐயாவோ
அம்மை > அம்மா> அம்மாவோ

சேய்மையில் உள்ளாரை விளிக்கும் வேளை கூடுதலாக அளபெடுத்து விளிப்பதும் இயல்பாகும்.

அப்பா அ அ அ
அம்மா அ அ அ

ஐயா அ அ அ
ஏ ஏ ஏ
ஓ ஓ ஓ

இவ்வாறான , ஒலிப்பு அமைப்பில்

ஏ ஏ ஏ > என விளித்து அது மிகுந்தும் கெட்டும் திரிந்தும் விரிந்தும் சொல்லாய் மலரும். அவ்வாறு மலர்ந்து உருவான விளியே

எல்லா, எல்லோ, எல்லே, எலே, லே எனும் தமிழ் விளிகள்...

ஒத்த அகவையுடையோரும் நண்பரும் உறவினரும் ஒருவரை ஒருவர் விளிக்க பயன்படுத்திய பயன்படுத்துகின்ற விளிகளே இவை.

எல்ல எனும் விளி பாற்பொதுமை பெற்ற விளியாகும். இவ்விளி தமிழில் பழந்தமிழ் இலக்கியங்களிலும் பழந்தமிழர் வழக்கிலும் பயன்பாட்டிலுள்ளதாகும். கணவன் மனைவியையும் மனைவி கணவரையும் விளிக்க எல்ல என்றனர்.

"கேளாய், எல்ல! தோழி! வாலிய
சுதை விரிந்தன்ன பல் பூ மராஅம்" (அகம் : 211)

எல்ல திரிந்து எல்லா என்றும் எல்லே என்றும் மாறும்.

தலைவன் தலைவியை அழைக்கவும், தோழி தலைவியை அழைக்கவும், தலைவி தோழியை அழைக்கவும், தோழி தலைவனை அழைக்கவும். பெரியோர் சிறுவரை அழைக்கவும் எல்ல , எல்லா, எல்லே, ஏலா, ஏல, ஏலே, ஏழ, ஏட, ஏடா, அட, அடா, அடே, அடீ என இவ்விளிப்பு பல்வகையில் திரிபுற்று வழங்கப்பட்டுள்ளது.

எல்லா (பெ)

1. "நில்லாங்கு நில்லாங் கிவர்தரல் எல்லாநீ" (மருதக்கலி –30) தலைவன் தலைவியை விளித்தது.
2. "எல்லா விஃதொத்தன் என்பெறான் கேட்டைக்காண்" (குறிஞ்சிக்கலி 25)
3. "எல்லே துளிகொளிடை மடத்தோழீ" (திருவாய்மொழி – 5:3:5) தலைவி தோழியை விளித்தது.
4. "ஏடா அழியல் எழுந்திது கொள்ளாய்" (மணிமேகலை 14:12)

5."நில்லடஇயெனக்கடுகினன்பெண்ணென நினைந்தான்" (கம்ப. ஆரணி .93)

6. ஏடா: "பெருந் தோள் செல்வத்து இவளினும் எல்லா என் பெரிது அளித்தனை நீயே"

(நற்:270:6–7).

7. ஏடீ: "எல்லா நாம் எண்ணிய நாள் வரை இறவாது காதலர் பண்ணிய மாவினர் புகுதந்தார்" (கலி:34:21–3).

8. தோழி (முன்னிலைப் பெயர்): "எல்லாவும் ஏடியும் தோழி முன்னிலைப் பெயர்"

(நிக.தி :2:154)

எல்ல > எல்லா என்றும் எல்லே என்றும் ஏலே என்றும் ஏழ என்றும் திரியும்.

ஏழ > ழகரம் டகரமாகத் திரிதல் முறையில் ஏட எனத் திரியும் என்பார் பாவாணர். ஏட > அட என்றும் அட > அடா என்றும் அடா > அடே எனவும் திரிந்து வழங்கும். ஆண்மகனை விளிக்கவே அடா, அடே எனும் விளிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது வெளிப்படை.

இதுவே திரிந்து பெண்பாலுக்கு அடீ , ஏடி ஈற்றில் வெறும் டீ நிற்கும். ஆணுக்கு டா வாகத் தனித்து நிற்கும்.

டா, டீ என்பன ஆணுக்கும் பெண்ணுக்குமான அடா, அடீ என்பதன் கொச்சை வழக்காகும். நண்பர்க்குள் இவ்வாறு விளிப்பது இயல்பு; ஆனால் இவை மதிப்புறவு விளிகள் அல்ல. எனவே பெரியோரிடத்து யாரும் பயன்படுத்தார்.

இந்த அடே எனுஞ் சொல் மலாயில் இருபாலுக்கும் பொதுவாகி திரிபுற்று இளவலாகிய தம்பி தங்கையரைக் குறிக்கப் பயன்படுகின்றது.

இதனை அவர்கள் Adek> adik (அடேக்) என்பர். விளிக்கும் வேளை இருவரையும் அடேக் என்றாலும்
தம்பியைக் குறிக்க adik lelaki (அடேக் லெலாக்கி) என்றும் தங்கையைக் குறிக்க adik perempuan (அடேக் பெரெம்புவான்) என்றும் கூறுவர்.

ட கரம் ரகரமாகத் திரிதல் முறையில் அடா, அடே என்பன அரா , அரே எனத் திரியும்.

அடா > அரா
அடே > அரே

அரே > ரே , அரேரே
அரரே, அரர என வடக்கில் வழங்குகின்றது.

இவ்வாறு நம் பண்டைத் தமிழர் வழங்கிய விளிப்பாகிய எல்ல, எல்லா உலகின் பலமொழிகளிலும் பயன்படுவது நம் தமிழுக்குக் கிட்டிய பெருமையே. எனவே

எல்ல> எல்லா எனும் பண்டைத் தமிழ் விளிப்பே, ஈறு மட்டும் நின்று மலாயிலும் இந்தோனேசியாவிலும் லா என வழங்குகின்றது என்பதே என் முடிபு.

இன்றும் தமிழ்நாட்டு ஊர் வழக்கில், திரை வழக்கில் லே எனும் ஈற்றினை

என்னலே,
சொல்லுலே
பாருலே
வாலே
போலே

எனும் அதே வழக்கே மலாயிலும்

என்னலா > apalah
சொல்லுலா > cakaplah
பாருலா > lihatlah
வாலா > marilah
போலா > pergilah..

எனத் திரிந்து வழங்குகின்றது. இஃது எல்லா என்பதன் ஈறான லா என்பதாகும். மலாய் மக்களிடையே தமிழர் கொண்டிருந்த நல்லுறவே இத்தகு தாக்கத்திற்கு அடிப்படை. இக்காலத்து அன்பர் சிலர் கருதுவது போல் மலாய் வழக்கே தமிழரிடை தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை விட மலாய் லா பின்னொட்டை மலாயர் தமிழரிடமிருந்தே பெற்றனர் என்பதே உண்மையாகும். எல்லா எனும் விளி, இந்தோ ஐரோப்பிய மொழிகளில் hello எல்லோ என வழங்குவது என்பதும் தனி ஆய்வாய் விளக்கப்பட வேண்டியதாகும்.

எல்லா என நண்பரை நோக்கி விளித்ததால் பண்டை நாளில் தோழர்க்கு எலுவர் எனுஞ் சொல்லும் பயின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

லா தமிழினின்று மலாய் வழக்கில் பயில்வதாயினும் மலேசியத் தமிழர் தம் அன்றாடத் தமிழ் வழக்கில் லா எனப் பயன்படுத்துவது அரிதே. சிலரே லா ஈற்றைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவது மதிப்புக் குறைவாகவும் கருதப்படுகின்றது. எனவே மலேசியத் தமிழரெல்லாரும் வாலா போலா என்பர் எனும் லா அடையாள கருத்தினைக் கொள்ளுதல் ஒருவகையில் தவறே.

பொங்கல் இளமழை

முனைவர் ஆ. அரிமாப்பாமகன்
மேனாள் ஆங்கில விரிவுரையாளர்
புதுச்சேரி

'மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்கல் இளமழை புடைக்கும் நாட
நயவாய் ஆயினும் வரைந்தனை சென்மோ
கன்முகை வேங்கை மலரும்
நன்மலை நாடன் பெண்டெனப் படுத்தே.'

(ஐங்குறுநூறு – 276).

பொருள் : மந்தியின் காதலன் கடுவன், பெரிய பாறையில் அமர்ந்து கொண்டு பொங்கித் திரண்டு செல்லும் இளம் மேகக் கூட்டத்தை (மஞ்சு) நறைக்கொடி கொண்டு அடிக்கிற நாட்டுத் தலைவனே! விருப்பம் குறைந்திருப்பினும் இவளைத் திருமணம் செய்து, வேங்கை மலரும் நாடன் மனைவி என்று உரிமை தந்து, பிறகு செல்வாயாக என்று தோழி கூறுகிறாள்.

(அறை = பாறை ; கன்முகை = மலைக்குகை)

நாறு = மணம் வீசு. நாற்றம் = மணம்.

'முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்' – திருக்குறள்.

'நாற்றம் இல்லாத மலரின் அழகுஇன்னா' – இன்னா நாற்பது.

'இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர்' – திருக்குறள்.

'கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே' – ஆண்டாள், நாச்சியார் திருமொழி.

நாற்றம் என்னும் சொல் இக் காலத்தில் கெட்ட வீச்சத்தைக்(odour) குறிப்பதாக அமைந்துவிட்டது. இன்று இருமொழிப் புணர்ப்பாகத் 'துர்நாற்றம்' என்பர். நல்ல நாற்றத்தை 'நறுமணம்'(fragrance) என்கிறோம்.

இப்படி நறுமணம் தரும் கொடி நறை என்றும், நறவம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இது இப்போது இலவங்கம், கிராம்பு எனப்படுகிறது.

'நறவொடு தாமம் முகிழ் விரிய' – பரிபாடல்.

'சூடா நறவொடு காமம் விரும்ப' – பரிபாடல்.

'புரி நெகிழ் முல்லை நறவொடு அமைந்த' – கலித்தொகை.

'நறாஅ அவிழ்ந்து அன்ன மெல்விரல் போது கொண்டு' – கலித்தொகை.

'பனி துறை பகன்றை நறை கொள் மா மலர்' – புறநானூறு.

'நறு விரை துறந்த நறை வெண் கூந்தல்' – புறநானூறு.

'குறவர் கொன்ற குறை கொடி நறை பவர்' – நற்றிணை....

'போருக்குச் செல்கிறேன் என்றோ பொருள்தேடச் செல்கிறேன் என்றோ' கூறித் திருமணத்தைத் தள்ளிப்போடும் காதலனிடம், 'உடனே திருமணம் செய்து கொள்' என்று தோழி வேண்டும் பாடலே மேற்கூறிய ஐங்குறுநூற்றுப் பாடல்.

'கரையாடக் கெண்டை கயத்தாட மஞ்ஞை
சுரையாழ அம்மி மிதப்ப–வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை'

இப் பாடல் மொழிமாற்றுப் பொருள்கோளுக்கு எடுத்துக்காட்டாக வந்த பாடல்.

கானக நாடன் சுனையில் கரையாட மஞ்ஞை, கயத்தாட கெண்டை என்று சொற்களை மாற்றிப் பொருள்கொள்ள வேண்டும் என்பது இலக்கணம்.

ஆனால், மேலே கூறப்பட்ட தலைவனைப் போன்று சாக்குப்போக்குச் சொல்லும் தலைவனைப் பகடி செய்யும் பாடலாக இதனைக் கொண்டால் எதையும் மாற்றாமல் உள்ளபடியே பொருள் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

" அடியே தோழி! நம் தலைவர் எப்படிப்பட்டவர் தெரியுமா? சொன்ன சொல் மாற மாட்டார். உண்மையே பேசும் வியப்பான காதலர். அவருடைய நாட்டுச் சுனை கூட வியப்பானதுதான். சுனையின் கரையில் கெண்டை மீன்கள் ஆடும் ஆனால், குளத்திலே மயில்கள் ஆடும்; சுரைக்குடுக்கை அமிழ்ந்துவிடும் ஆனால், அம்மி மிதக்கும்; மலை போன்ற யானை நிலைகொள்ளாமல் தண்ணீரில் தத்தளிக்கும் ஆனால், முயல் நிலைத்து நிற்கும். அப்படிப்பட்ட வியப்புகள் (அதிசயங்கள்) நடக்கும் கானக நாட்டிலிருந்து வரும் தலைவர் உண்மையே பேசுவார், நம்புவோமாக! "

பொங்கல் இளமழை = திரண்ட மேகம்.
திரண்டு உருண்டு காணப்படுவது 'பொம்மை'.
பொம் = திரட்சி. இப்போதும் பெண்டிர் கட்டியிருக்கும் சேலை புடைத்திருப்பதைப் 'பொம்'மென்று இருக்கிறது என்பர்.

வாட் கைப்பிடியின் திரண்ட குமிழ் pommel எனப்படும்.
உருண்டு காணப்படும் அரத்திப் பழம் (ஆப்பிள்) பிரஞ்சு மொழியில் pomme. (pomum = fruit, Latin).
{பெரிய – pompous.}.
தரைக்கு அடியிலிருந்து கிடைக்கும் உருளைக்கிழங்கு பிரஞ்சு மொழியில் pomme de terre. (de = from, terre < தரை, நிலம் = தரை >terra Latin).
தறிக்க(துண்டிக்க)ப் பட்ட தரை (நில)ப் பகுதியை territory என்கிறோம்.

கதிரவன் தன்மைகளைக் கணித்த கன்னித்தமிழர்

இலக்குவனார் திருவள்ளுவன்
தலைவர் – தமிழ்க் காப்புக் கழகம்

சூரியன் அல்லது ஞாயிறு ஒரு விண்மீனே! சூரியனின் கிரேக்கப் பெயர் அப்பல்லோ என்பதாகும். கிரேக்கத் தொன்மக் கதையின்படி இலெட்டோ (Leto) வின் உறவால் சீயசு (Zeus) தாய் ஆகிக் குழந்தையைப் பெற்றுக் கொள்ள இடம் தேடி அலைந்து இறுதியில் கிரேக்கத்தில் உள்ள தீவில் (தெலோசு : Delos) அப்பல்லோவைப் பெற்றெடுக்கிறாள். சப்பான், சிரியன் முதலான சில நாடுகளில் சூரியன் பெண் கடவுளாகக் கருதப்படுகிறது. சூரியக் கடவுளின் பெயர் சப்பானில் அமத்தெரசு (Amaterasu) ; சிரியாவில் அரிண்ணா (Arinna) எனப்படும்.

ஞாயிறு என்பது, கதிரவன், பகலவன், செங்கதிரோன், பரிதி, வெங்கதிரோன் முதலிய பெயர்களில் குறிப்பிடப்படு கிறது. பூமியை விட இது பன்மடங்கு பெரியது. பூமியிலிருந்து ஏறத்தாழ 15 கோடி புதுக்கல் தொலைவு உள்ளது. இதைச் சுற்றி 9 கோள்கள் உள்ளன. ஞாயிற்றிற்குத் தமிழறிஞர்கள் சூட்டிய பெயர்கள் அதன் அறிவியல் தன்மைகளில் அமைந்தவையே!

சுரீர் என வெயில் அடிப்பதாகக் கூறுவோம். கடும்வெயில் அடிக்கும் பாதை, சுரம் எனப்படும். இவை போல் 'சுர்' என்னும் வேர்ச்சொல்லின் அடிப்படையில், அனலாய்த் திகழும் விண்மீன் "சூரியன்" எனத் தமிழில் கூறப்படுகிறது.

கதிரை உடையது கதிரவன்; வெம்மையான கதிரை உடையது வெங்கதிரோன்; செந்நிறக் கதிரை உடையது செங்கதிரோன்; வட்டமாக அமைந்து சுழல்வதால் பரிதி; பகற் பொழுதை உண்டாக்குவது பகலவன்; கனலாய்த் திகழ்வதால் கனலி என்று பலவகைகளில் சூரியன் அழைக்கப் பெறும்.

எல் என்றால் ஒளி எனப்பொருள். ஒளிமிக்க இவ்விண்மீன் எல், எல்லி, எல்லவன், எல்லை என்று கூறுப்படும். என்றூழ் என்பது சூரியனின் மறுபெயராகும். சூரியன் ஏற்படுத்தும் கடும் வெயில் எறிப்பு எனப்படும். புவிப்பிழம்பு பிரிவதற்கு முன் ஆதியாய் இருந்தது என்னும் பொருளில் ஆதவன் எனச் சூரியனை அழைப்பது நம் தமிழ் முன்னோர்களின் அறிவியல் அறிவை நன்கு உணர்த்துகிறது.

நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம் (அகநானூறு 31:1)

என்னும் வரிகளில் நெருப்பு என்று சொல்லுமாறு செந்நிறமாகக் காணப்படும் வெப்பம் விளங்கும் ஞாயிற்று மண்டிலம் புலவர் மாமூலனாரால் விளக்கப்பட்டுள்ளது.

பின்வருவன ஞாயிற்று மண்டிலத்தையும் ஞாயிற்றின் தன்மையையும் குறிப்பிடுகின்றன.

விரிந்த பரப்பு உடையது ஞாயிற்று மண்டிலம்:

மலர் வாய் மண்டிலம் (புறநானூறு:175:9)

மிகுதியான இயக்கப் பரப்பு உடையது ஞாயிற்று மண்டிலம்:

வீங்கு செலல் மண்டிலம்
(நெடுநல்வாடை:161:45)

ஞாயிற்று மண்டிலம் தேய்தல் இல்லாதது:

தேயா மண்டிலம் (பரிபாடல்:17:32)

சுடர் உடையது ஞாயிற்று மண்டிலம்:

சுடர் மண்டிலம் (அகநானூறு: 367:1)

சுடர் ஒளி உடையது ஞாயிற்று மண்டிலம்:

சுடர் கெழு மண்டிலம் (அகநானூறு: 378:14)

அழகிய வட்டமான வடிவம் கொண்டது ஞாயிறு:

பருதிஅம் செல்வன் (கலித்தொகை: 26:2; அகநானூறு: 360:2)

மாசில்லாதது ஞாயிற்று மண்டிலம் :

மைஅறு மண்டிலம் (கலித்தொகை: 141:12)

ஞாயிறு தன்னுடைய பலவாகிய கதிர்களைப் பரப்பிப் பல்வேறு மாண்புகளுடைய பகற்பொழுதைத் தரும்:

பல்மான் எல்லை தருநன் பல்கதிர்பரப்பி

(பொருநராற்றுப்படை: 232–233)

ஞாயிறு விரிந்து செல்லும் கதிர்களை உடையது:

காய்சினத்த கதிர்ச் செல்வன்
(பட்டினப்பாலை:122)

தெறுகதிர்க் கனலி (புறநானூறு: 43:2; 397:24)

வெம்மை தருகின்ற கதிர்களை உடையது ஞாயிறு:

வெங்கதிர்க்கனலி (புறநானூறு:41.6)

ஒளிவீசும் கதிர்களை உடையது:

அலங்குகதிர்க் கனலி (புறநானூறு: 35.6)

பசுமை நீங்கிக் காயும் வகையில் நிலத்தைப் பிளக்கச் செய்யும் தீயைப் போன்ற கதிர்களை உடையது ஞாயிறு:

நிலம் பக

அழல்போல் வெங்கதிர் பைது அறத் தெறுதலின் (அகநானூறு:1:9–10)

அச்சம் தரும் ஞாயிற்றின் ஒளிமிகுந்த கதிர் (கடல் நீரைமொண்டு சென்று) மழை பெய்விக்கும்:

உருகெழு ஞாயிற்று ஒண்கதிர்

…………………………………………

……துளிசொரிந்தாங்கு
(புறநானூறு:160:1–3)

எல்லாராலும் விரும்பப்படும் வெப்பத்தைத் தரும் ஞாயிறு:

வெவ்வெள் செல்வன்
(பொருநராற்றுப்படை:136)

வெப்பத்தால் அச்சுறுத்தும் கனலையுடையது ஞாயிறு இருளை நீக்கும்:

இருள் நீக்கும் சுடர் (கலித்தொகை:100:11)

இருளை நீக்கிப் பகலை உண்டாக்குவதற்காக எழுவது ஞாயிறு:

பாய்இருள் நீங்கப் பகல் செய்யா எழுதரு

ஞாயிறு………… (மலைபடுகடாம் 84–85)

ஞாயிற்று மண்டிலம் நகரும் அறிவியல் உண்மையையும் பழந்தமிழர் அறிந்திருந்தனர்.

விரிகதிர் மண்டிலம் தெற்கு ஏர்பு,
வெண்மழை

அரிதின் தோன்றும் அச்சிரக் காலையும்

என்பது சிலப்பதிகாரம். (14:104–105)

ஞாயிறு தென்திசை நோக்கி நகரும் காலங்கள்:

கார்காலம், கூதிர் காலம், முன்பனிக்காலம் ஆகியவை.

ஞாயிறு வடதிசைச் செல்லும் காலங்கள்:

பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் எனக் கண்டறிந்திருந்தனர்.

நாள்மீன்களும் கோள்மீன்களும் சூழ இருப்பது ஞாயிறு:

வானிற விசும்பிற் கோள்மீன் சூழ்ந்த

விளங்குகதிர் ஞாயிறு
(சிறுபாணாற்றுப்படை: 242–247)

விண்பொருள்களாகக் கருதப்படுகின்ற வேறு இரு தெய்வங்களுக்குப் பிறந்தது ஞாயிறு என மூடத்தனமாக நம்பாமல் அறிவியல் தன்மையின் அடிப்படையில் கதிரவன் குறித்த கருத்துக்களைத் தொடக்கக் காலத்திலேயே தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதற்கு இவை போல் பலச் சான்றுகள் உள்ளன.

மதுரைக்காஞ்சியில் "காழ்" – ஒப்புருப் பொருண்மை

பேரா. முனைவர் ப. கொழுந்தசாமி,
அரசினர் ஆய்வு நிறுவனம், புதுச்சேரி.

பாப் புனைவோர் மொழித்திறன் வாய்ப்பால் சொல் விளையாட்டில், ஒரே இலக்கண வகையில் ஒரு வடிவத்தில் பல கருத்தில் சொல்லைக் கையாளுகின்றனர். தமிழின் சொல் வளமும் பொருண்மைக் கட்டமைப்பும் இதை வாய்ப்பாக்குகின்றன. இந் நிலையில் மதுரைக்காஞ்சியில் 'காழ்' என்னும் பெயர்ச்சொல் ஒப்புருச் சொல்லாக இயல்வதை விளக்குவதாக இக் குறிப்புரை அமைகின்றது.

காழ்: கருத்து: காழ், பெயர்ச்சொல்.

1. மரவயிரம், விறகு, காம்பு, கழி
2. மனவுறுதி
3. கட்டுத்தறி
4. தூண், கதவின் தாழ்
5. ஓடத்தண்டு
6. இரும்புக் கம்பி
7. யானைப் பரிகோல்
8. இரத்தினம், முத்து, மணிவடம்
9. பளிங்கு
10. பூமாலை, நூற்சரடு
11. விதை, கொட்டை
12. கருமை
13. குற்றம்

இங்ஙனம் பல பொருள் கொண்ட இச் சொல், தொல்காப்பிய நூற்பா 365இல் விதை என்றும், நூற்பா 1589இல் மரத்தின் உள்ளீடு என்னும் கருத்திலும் பயில்கின்றது. பத்துப்பாட்டுள் 782 அடிகளால் இயன்ற மதுரைக்காஞ்சியில் காழ் என்னும் பெயர்ச்சொல்,

நறுங்காழ் கொன்று...... (அடி 286) = சந்தன மரம்
வன்தொடர் பேணாது காழ் சாய்த்து (அடி 382) = வலிமையான கட்டுத்தறிக் கம்பம்
திண் காழ் (அடி 449) = திண்ணிய கொடித் தண்டு
...... காழ் சாய்த்து (அடி 621) = சட்டக் கால்
பரூஉக் காழ்... (அடி 681) = ஆரம்
திண் காழ் ஆரம் ... (அடி 715) = சந்தன மர வயிரம்
ஒண்காழ் ஆரம் ... (அடி 716) = வடம்
காழ் மண்டு எஃகம்... (அடி 739) = வேலின் காம்பு

என்றவாறு ஒப்புருச் சொல்லாகப் பல கருத்தில் ஆளப்பட்டுள்ளது. ஆயினும் திண்மை, வலிமை என்னும் பொருட்களத்தில் இவை இயல்கின்றன. இதனால் ஒரு பொருளின் திண்மை, வலிமை போன்றவற்றைத் தொல் தமிழர் அறிந்திருந்தமை வெள்ளிடைமலை. மேலும் இத்தகைய பொருண்மை விழிப்புணர்வோடு இலக்கியங்களை அணுகல் சீர்மை நல்கும்.

நன்றி : இணையத் தரவுகள்

அகரமுதலித் திட்ட இயக்ககத்
தமிழ்க் கலைக்கழகத்தின் 195,196ஆம் கூட்டங்கள்

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 195, 196ஆம் கூட்டங்கள் முறையே 18.12.2025, 23.12.2025 ஆகிய இருநாள்கள் நடைபெற்றன.

அகரமுதலி இயக்கக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி க. பவானி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில், அலுவல்சாரா உறுப்பினர்களான புலவர் வெற்றியழகன், முனைவர் இரா.கு. ஆல்துரை, திரு. அ. மதிவாணன், அறிவியல் ஒளி ஆசிரியர் திரு. நா. சு. சிதம்பரம் ஆகியோர் பங்கேற்றனர். மேலும் மேனாள் ஆங்கில விரிவுரையாளர் முனைவர் ஆ.அரிமாப்பாமகன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தமிழ்மொழி (ம) மொழியியல் புல உதவிப் பேராசிரியர் முனைவர் நா. சுலோசனா மற்றும் அலுவல்சார் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இவ்விரு கூட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 470 தமிழ்க் கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது.

ஏற்பளிக்கப்பட்டுள்ள சொற்களுள் சில:

Anthro diversity	மாந்தப் பன்முகத்தன்மை
Artesian aquifer	பொங்கு ஊற்று நீர்நிலை
Available soil water	மண் நீர் இருப்பு
Blending treatment	கலப்பு மருத்துவம்
Coastal flooding	கடலோர வெள்ளம்
Contaminant plume	மாசு நுரைப்பு
Deepwater habitat	ஆழ்கடல் வாழ்விடம்
Emergent plant	விளையும் பயிரி
Flow diagram table	பாய்வு விளக்கப்படம்
Glacial outwash	பனிப்பாறை உருகல்
Green water footprint	நீர்த்தட வரைபடம்
Groundwater recharge	நிலத்தடி நீரூட்டல்
Hydrological data	நீர்வளத் தரவு
Lacustrine wetland	ஆழமிலா ஈரநிலம்
Saprobic	இயற்கையுரப் பயிரி
Biometric sensor	உடல்சார் உணரி
Bodycon clothing	இறுக்க ஆடை
Cable knit	புரிப் பின்னலாடை
Conservative style	மரபுப்பாங்கு
Cruise wear	நீருலா உடை
Glam rock	இசைஞர் உடை
Lyocell fiber	மரக்கூழ் இழை
Manufactured fiber	செய்யிழை
Mass produce	பெருந்திரள் ஆக்கம்
Nonwoven	நெய்யாத் துணி

நாளும் விளையும் சொற்கதிர்

நாளும் விளையும்
சொற்கதிர்
ESCALATOR
மின்படி

Bakery
அடுமனை
நாளும் விளையும்
சொற்கதிர்

நாளும் விளையும்
சொற்கதிர்
FOLDER
கோப்புறை
PDF

நாளும்
விளையும்
சொற்கதிர்
Cartridge
மைப்பொதி

நாளும் விளையும்
சொற்கதிர்
Inkjet
மைவீச்சு

நாளும் விளையும்
சொற்கதிர்
Peach fruit
மஞ்சரத்திப் பழம்

Aahaaan.....
நாளும் விளையும்
சொற்கதிர்
MEME
போன்மி

நாளும் விளையும்
சொற்கதிர்
LASER
சீரொளி

நாளும் விளையும்
சொற்கதிர்
Weed whacker
புல்வெட்டி

நாளும் விளையும்
சொற்கதிர்
LED
ஒளிர்விமுனை

நாளும் விளையும்
சொற்கதிர்
DURIAN
முள்ளம் பழம்

நாளும் விளையும்
சொற்கதிர்
GPS
தடங்காட்டி

நாளும் விளையும்
சொற்கதிர்
Trombone
துரும்பூதி

நாளும் விளையும்
சொற்கதிர்
OCR
எழுத்துணரி